உ
சிவமயம்



யாழ்ப்பாணம் - தெல்லிப்பழையைச் சேர்ந்த

அமரர்

# திருமதி.தங்கமுத்தம்மா நாகலிங்கம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்து வெளியிடப்பெறும்

# நினைவு மலர்

16-11-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் – தெல்லிப்பழையைச்

சேர்ந்த

## அமரர்

# திருமதி. தங்கமுத்தம்மா நாகலிங்கம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

16-11-2004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"தீராத இன்பம் தரும் உருதரும் தந்தை
கருவது கொண்ட தாய் திருவது தரும்

குரு மூவரே தெய்வம்
மற்றவர் தேவர்களே"

உணர்வார் அடைவார் முத்தியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



மண்ணில்
07-05-1922

அமரர்

விண்ணில்
17-10-2004

# திருமதி. தங்கமுத்தம்மா நாகலிங்கம்

## திதிவெண்பா

*தாரண வருடம் கூதிர்கால முதலாம் நாளில்*
*நிகரிலா இன்பம் பெற்றிட எம்தம் – அன்னையாம்*
*தங்கமுத்தம்மா நண்ணினார் இறையடி*
*வாழ்ந்திட ஐப்பசிச் சதுர்த்தியில் தானே.*

அன்னை என்பவள் ஆண்டவன் வடிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# பஞ்சபுராணம்

## விநாயகர் வணக்கம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினு மனத்து மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயினும் பிணியும் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந்தாரே.

## திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பெய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழத்தலைப் புலையனேன் றனக்குச்
செம்மையே யாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னனச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியை
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண்டுள்ளங்
குளிரவென் கண் குளிர்ந்தனவே

## திருப்பல்லாண்டு

மன்னுகதில்லை வளர்க நம் பக்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்ன நடைமடவாளுமை கோனடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாதயினப் அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேன் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போதுன் அடியின் கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்த ஏறும் கரியுரி போர்வையும் எழில் நீறும்
இலங்குநூலும் புலியத ளாடையும் மழுமானும்
அசைந்த தோடும் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உகந்தசூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உசந்த பாசக் கயிற்றொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய பெருமானே.

## அபிராமியந்தாதி

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும் உங்கள் திருமணக் கோலமும் சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்து என்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து
வெவ்விய காலன் என்மேல் வரும் போர்து வெளிநிற்கவே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழியவே!
வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசை கொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழியவே!
சூழ்கலி நீங்க தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையகமே!
தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே!
வான மறிந்த தனைத்து மறிந்து
வளர்மொழி வாழியவே!

– மகாகவி. சுப்பிரமணிய பாரதியார் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லிங்காஷ்டகம்

பயன்கரி அமரார்கள் போற்றிய லிங்கம்
எந்தக் களங்கம் இலா ஒளிர் லிங்கம்
பிறவியின் துயரைப் போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

முனிவர்கள் அமரார்கள் போற்றிய லிங்கம்
காமனை எரிசெய்கருணா லிங்கம்
இராவணன் கர்வம் அடக்கிய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

வாசனை யாவையும் பூசிய லிங்கம்
புத்தி அளித்திடும் காரண லிங்கம்
சித்தர்சுர அசுர தொழுதிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

தங்கம் நவமணிகள் சூடிய லிங்கம்
பாம்பினை இடையினில் சுற்றிய லிங்கம்
தக்ஷனின் வேள்வியை வீழ்த்திய லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

குங்குமம் சந்தணம் மின்னிடும் லிங்கம்
பங்கய மலரினைத் தாங்கிடும் லிங்கம்
பொங்கிடும் வினைகளைத் தீர்த்திடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவ கணங்கள் துதித்திடும் லிங்கம்
நல்லிதயத் தினில் நிலவிடும் லிங்கம்
சூரிய கோடி சுடர்விடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

எட்டுத் தளங்களும் எளிர்மிகு லிங்கம்
யாவும் படைத்திடும் காரண லிங்கம்
அஷ்ட தரித்திரம் போக்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

இந்திரன் தேவரின் உருக்கொளும் லிங்கம்
தேவவன மலரை பூசை கொள் லிங்கம்
முழு முதல் பரமென விளங்கிடும் லிங்கம்
நானும் வணங்கும் சதாசிவ லிங்கம்

லிங்காஷ்டகம் தன்னை எவர் ஒருவர்
சிவ சன்னிதியில் படிக்கிறாரோ
அவர் சிவலோகப் பதவியுடன்
சிவாந்தம் கொள்ளுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணையாக வருவாய்

பல்லவி

உன்னுடைய பார்வையொன்றே உறுதுணையாய் வருகுதம்மா
கும்மிருட்டுப் பாதையிலும் பேரொளியாய்த் தெரியுதம்மா.

அனுபல்லவி

என்னுடைய ஆட்டமெல்லாம் நீ அமைத்த மேடையிலே
இசைவதுவும் அசைவதுவும்நின் கடைக்கண் சாடையிலே.

சரணம்

சிற்றிடையில் சிவந்தபட்டு திருக்கரத்தில் திரிசூலம்
நெற்றியினில் செந்தூரம் நீள்விழியில் கருணைமழை
தெல்லிநகர்த் துர்க்கைஅம்மா உன்னழகைப் பார்ப்பதற்கு
என்முகத்தில் அமைந்திருக்கும் இருவிழியால் இயன்றிடுமோ

சிங்கத்திலே நீவந்து சிறியேமைக் காத்திடுவாய்
எங்கள்பல குறையனைத்தும் ஈன்றவளே நீயறிவாய்
சிறியேங்கள் அழைத்தகுரல் திருச்செவியில் ஏற்றருள்வாய்
அறிவேதும் இல்லாதேம் அன்புமொழி கேளுமம்மா.

அம்பிகையே உலகீன்ற ஆரணியே காரணியே
செம்பவள மேனியளே சிவக்கொழுந்தே வந்தருள்வாய்
அணுவாகி உயிராகி ஐம்பூதப் பொருளாகி
துணையாகி எமைக்காக்கும் துர்க்கைஅம்மா வந்தருள்வாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்றிநிற்கும் உலகமெல்லாம் துர்க்கையென்று சொல்லுதம்மா
சூழ்ந்திருக்கும் உயிர்களெல்லாம் துதிக்குதம்மா உன்புகழை
வாழ்ந்திருக்கும் காலமெல்லாம் வணங்கிடுவேன் உன்னடியை
வரஇருக்கும் பிறவியிலும் வாழ்த்திடுவேன் உன்னருளை.

கேட்டவரந் தந்திடுவாய் கேதார நாயகியே
சூட்டுமலர்த் தாள்சரணம் சுந்தரியே சரணமம்மா
சர்க்கரையாய் முக்கனியாய்த் தமியேங்கள் மனத்தினிக்கும்
துர்க்கா மகேஸ்வரியே சரணமலர் சரணமம்மா.

## அம்பாள் துதிப்பாடல்

அம்மா அம்மா என் தாயே
ஆறுதல் தந்தெமைக் காப்பாயே
இம்மாநிலத்தில் நீதானே
எங்கள் துர்க்கை தாய்தானே (அம்மா அம்மா)

இங்கே நாம்பாடும் வேதனைகள்
எல்லாம் உனக்குத் தெரியாதோ
எல்லாம் நீயே அறிந்திருந்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

எல்லாப் பிழையும் பொறுத்திடம்மா
தாயே எம்மைக் காத்திடம்மா
பொல்லாப் பெல்லாம் போக்கிடவே
புதுமை ஒன்றைச் செய்திடம்மா (அம்மா அம்மா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லால் வடிக்க முடியாத
துயரம் எனக்கு ஏனம்மா
எம்மால் தாங்க முடியாது
தாயே எம்மைக் காப்பாற்று (அம்மா அம்மா)

ஒன்றா இரண்டா நாம் சொல்ல
உள்ளத்து வேதனை தீராயோ
என்றும் உன்னை நாம் துதித்தும்
ஏனோ எம்மை வாட்டுகின்றாய் (அம்மா அம்மா)

நின்றால் நடந்தால் உன் நினைவு
எங்கும் எதிலும் உன் காட்சி
துன்பம் வராமல் காத்தெமக்கு
துணையாய் என்றும் வந்திடம்மா (அம்மா அம்மா)

## விநாயகரின் பதினாறு திருநாமங்களும் விளக்கமும்

1. ஓம் சுமுகாய நம
   மங்கள முகம் வாய்ந்த சுமுகன்
2. ஓம் ஏகதந்தாய நம
   ஒற்றைக் கொம்பை உடைய ஏகதந்தனை
3. ஓம் கபிலாய நம
   கபில நிறம் வாய்ந்த கபிலன்
4. ஓம் கஜகாணாய நம
   யானைக் காதுகள் உள்ள கஜகா்ணன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. ஓம் லம்போதராய நம

பெருத்த வயிற்றோடு கூடிய லம்போதரன்

6. ஓம் விகடாய நம

குள்ளத் தோற்றமுள்ள விகடன்

7. ஓம் விக்னராஜாய நம

சகல விக்னங்களுக்கும் ராஜாவான விக்னராஜன்

8. ஓம் விநாயகாய நம

துஷ்ட செயல்களையும், இடையூறுகளையும் நீக்குவதில் வல்லவரான விநாயகன்

9. ஓம் தூமகேதுவே நம

நெருப்பைப்போல் ஒளி வீசி திகழ்பவராக தூம கேது

10. ஓம் கணாச்சாய நம

பூதகணங்களுக்கு தலைவராக விளங்கும் கணாத்சயன்

11. ஓம் பாலசந்திராய நம

நெற்றியில் பிறைச்சந்திரனை சூடியவரான பாலச்சந்திதிரன்

12. ஓம் கஜானனாய நம

யானை முகத்தை உடைய கஜானனன்

13. ஓம் வக்ரதுண்டாய நம

வளைந்த துதிக்கரமுடைய வக்ரதுண்டன்

14. ஓம் சூர்ப்காணாய நம

முறம் போன்ற அகலமான காதுகளையுடைய சூர்ப்பகர்ணன்

15. ஓம் ஹேரம்பாய நம

தம்மை வணங்கி நிற்கும் பக்தகோடிகட்கு அருள் புரியும் ஹேரம்பன்

16. ஓம் ஸ்கந்தபூர்வயாய நம

கந்தப் பெருமானின் தமையனான ஸ்கந்தபூர்வயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவாயநம

# திருமதி. தங்கமுத்தம்மா நாகலிங்கம் அவர்களின்

# வாழ்வின் துளிர்கள்

நாற்புறம் கடலாற் சூழப்பட்ட அழகிய ஈழமணித் திருநாட்டின் சிகரமாக விளங்குவது யாழ்ப்பாண நன்னகரமாகும். இந்நகரின் வடபால் அமைந்திருப்பது தெல்லிப்பழை (தெல்லிப்பள்ளி) என்னும் கிராமமாகும். இக்கிராமத்தின் கிழக்கே உள்ள மக்களில் ஒளிவிளக்காய் திகழ்ந்தவர் தாமோதரம்பிள்ளை பொன்னம்மா அவர்கள். இருபாலையைப் பிறப்பிடமாகக்கொண்ட பெரியார் கயிலாயபிள்ளை. இவர் ஈழநாட்டின் தலைநகரமான கொழும்பில் வியாபாரம் செய்தார். இவர் தெல்லிப்பழை பொன்னம்மா அவர்களை தனது வாழ்க்கை துணைவியாகக் கொண்டார்.

திருமதி பொன்னம்மா கயிலாயபிள்ளை அவர்கள் செங்கண்மாரி என்ற நோயைத் தீர்த்து வைக்கும் வைத்தியராகக் கடமையாற்றினார் அத்துடன் தெல்லிப்பழைக் கிராமத்தில் A.D கடை வைத்து மக்களுக்கு சேவையாற்றினார் இவர் தமது இன்பமாக இல்வாழ்க்கையின் பயனாக சௌபாக்கியம் திசை வீரசிங்கம், தங்கமுத்தம்மா ஆகிய அருந்தவச் செல்வங்களைப் பெற்றெடுத்தார். இவர்களில் மூன்றாவது செல்லப்புத்திரியாக அவதரித்தவரே திருமதி தங்கமுத்தம்மா அவர்களாவர். இவர் 1922ம் ஆண்டு மே மாதம் ஏழாம் திகதி (07.05.1922) இப்பாரினிலே வந்துதித்தார்.

தங்கமுத்தம்மா அவர்கள் தனது ஆரம்பக்கல்வியை மாவிட்டபுரம் தெற்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையிலும் உயர்கல்வியை இளவாலை கன்னியர்மட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை (Convent)இலும் கற்றார் இவர் தனது கல்வித் திறமையினால் ஆசிரியர்களின் பாராட்டைப் பெற்றார். இவர் தமது 18ஆவது வயதில் (1940ம் ஆண்டு) தெல்லிப்பழையைச் சேர்ந்த எரிபொருள் முகவர் திரு.சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களைத் திருமணம் செய்து இல்லறவாழ்வை நல்லறமாகக் கொண்டார். அத்துடன் தனது தாயார் திருமதி பொன்னம்மா அவர்கள் செய்து வந்த பரம்பரை வைத்தியத் தொழிலையும் செய்யத் தொடங்கினார்.

இவர் தனது இல்லற வாழ்க்கையின் நற்பயனாக வசந்தா, சத்திவேல் பிறேமா, கருணைவேல், தர்மினி, பத்மினி, ரவீந்திரன், துஷியந்தன் ஆகிய பிள்ளைகளைப் பெற்றுச் சிறப்பெய்தினார்.

திருவாளர்கள் பா.ஹரிச்சந்திரா நா.சரவணமுத்து சு.சிவபாலன், நா.நாகராஜன் திருமதிகள் சரஸ்வதி, பத்மயோகினி, கிரிஜா, கலா ஆகியோரைத் தமது மருமக்களாகவும் தனுஷன், உதயா, உஷா, கோபிநாத், கஜநாத், அர்ச்சனா, அஞ்சலா, அமுதீன், அருண், அமல், அலெக்ஸ், றஜூஜா, றஜூஜன், துஷாந், துவாரகன் ஆகியோரைப் பேரப்பிள்ளைகளாகவும் பெற்றுப் பெருமையுடனும் சிறப்புடனும் இனிது வாழ்ந்தார்.

திருமதி தங்கமுத்தம்மா அவர்கள் செங்கண்மாரி என்ற நோயைக் குணப்படுத்துவதில் மிகச்சிறந்த வைத்தியர் என்ற பெயரைப் பெற்றார். யாழ்ப்பாணம் மட்டும் அன்றி ஈழமணித் திருநாட்டின் சகலபாகங்களில் இருந்தும் நோயாளர்கள் இவரைத் தேடி வந்து சிகிச்சை பெற்றார்கள். தனது பேச்சு வல்லமையினாலும் திறமையினாலும் எல்லா நோயாளர்களையும் குணப்படுத்தினார் இவரின் அன்பினாலும் அறிவுத்திறமையினாலும் தன்னலமற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவையினாலும் சிறுவர், பெரியவர், வயோதிபர் என்ற பாரபட்ச மற்ற பணியினாலும் மக்கள் மனதில் என்றும் மறக்க முடியாத "அம்மா" என்ற இடத்தைப் பெற்று விட்டார்.

2004ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த இவ்வுலக வாழ்க்கையை விட்டு அம்பாள் பாதங்களிற் சரணடைந்தார். திருமதி தங்கமுத்தம்மா நாகலிங்கத்தின் பிரிவு எல்லோருக்கும் பேரதிர்ச்சியையும் பிரிவுத்துயரையும் கொடுத்த போதிலும் அவர் செய்த முற்பயனாலும் இடைவிடா துர்க்கை அம்மன் வழிபாட்டாலும் இறுதி நாட்களில் நோய் வாய்ப்பட்டு படுக்கையில் இருக்காமல் இவ்வுலகை நீத்தார் என்ற முறையில் மனம் சாந்தி அடைகின்றது.

**"நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோர்க்கும் பெய்யும் மழை"**

என்னும் திருக்குறளின் வாக்கியப்படி அன்னாரின் இறுதி யாத்திரையின் போது வர்ணபகவானின் ஆசீர்வாதத்தினால் மலர் மாரிபொழிவது போல் மழைமாரி பொழிந்தது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப் போமாக.

**ஓம் சாந்தி! சாந்தி !! சாந்தி!!!**

## சரணம் சரணம்

துர்க்கா சரணம் சரணம் தாயே
துர்க்கா சரணம் சரணம்
தேவி சரணம் சரணம் தாயே
தேவி சரணம் சரணம்
அம்மா சரணம் சரணம் தாயே
அம்மா சரணம் சரணம்
ஆத்தாள் சரணம் சரணம் தாயே
ஆத்தாள் சரணம் சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரத்துவமடைந்த**

**திருமதி. நாகலிங்கம் தங்கமுத்தம்மா அவர்களுக்கு**

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

சமீபத்தில் இறைபதம் அடைந்த தங்கமுத்தம்மா அவர்களை ஆண்டாண்டு காலமாக நினைவில் வைத்துப்போற்ற வேண்டியது எம் போன்றோர் கடமையாகும். தனது வாழ்வில் வைத்தியப்பணியையும் ஆத்மீகப் பணியையும் இணைத்து வாழ்ந்த பெருமை இவ் அம்மையாருக்கு உண்டு. செயலிலே செம்மை, பேச்சிலே நிதானம், வாழ்க்கையில் கடமையுணர்வு ஆகியவை ஒரு சேரப் பெற்றவர் இவர். தனது கணவனார் அமரர் நாகலிங்கம் ஐயா அவர்களின் பெருமைக்கு ஏற்ப இவ் அம்மையார் செயற்பட்டவர். ஏறக்குறைய ஐம்பது ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொடர்பு இக்குடும்பத்தாருக்கும் எமக்கும் உண்டு. எங்கள் ஆலயத்தோடும் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தோடும் அம்மையாரின் பிள்ளைகள் தொடர்பு கொண்டு நற்பணியாற்றி வருகின்றார்கள். எங்கள் தேவஸ்தானத்தின் நிர்வாகசபை உறுப்பினராக அம்மையாரின் மகன் வைத்திய கலாநிதி நா.சக்திவேல் அவர்கள் பணிபுரிந்தார். அன்னையையும் தந்தையையும் போல அவர்களின் பிள்ளைகளுக்கும் செயல் திறனும் கனிவான பேச்சும் உண்டு. இதனை முன்னிட்டு இப்பிள்ளைகளைப் பெற்ற பொழுதிலும் பார்க்க அவர்களின் பெருமைகளைக் கேட்டபொழுதில் பெரிதும் மகிழ்ச்சி யடைந்தவர் அம்மையார். எனவே அம்மையாரின் மறைவை முன்னிட்டு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் எல்லாம்வல்ல துர்க்கையம்பாளைப் பிரார்த்தித்துக் கொள்கின்றோம்.

கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி
தலைவர்
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I was deeply grieved when I received the message of the demise of my aunt Mrs.Nagalingam. As I Sat down for a few minutes to thank God for her life in our midst remembering my aunt showering her love, affection and towards our family, many memorable events in my mind. My aunt was a loving mother not only to her immediate family. but also to the extended family, the community and society at large.

Being an ayurvedic specialist in jaundice she was indispensable to many in the peninsula and beyond. Her demise is indeed an irreparable loss for many who sought counsel in various matters including domestic affairs. Her image will be ever fresh in the heart of her kith and kin and many whose path crossed hers.

May her soul rest in peace

Dr.Miss.C.V.Selliah
Principal,
J/Uduvil Girls' College
Chunnakam.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இவர் புகழ் நிலைத்திருக்க............

தங்கமுத்தம்மா எங்கே போகின்றீர்கள்?
அங்கம் குலுங்க அழுதுவரும் நெஞ்சங்களில்
தங்கிநின்று சேவை செய்த முத்தம்மா அல்லவா?
பங்குகேளாமல் பரிதாபத்துடன் நோய் தீர்த்த முத்தல்லவா?
கொங்கு நாட்டு மூலிகையால் குணப்படுத்திய வித்தகி
செங்கண்மாரியை பாரினில் அகற்றும் பரோபகாரி
கங்கணம் கட்டி யார் பரிகாரம் தேடினாலும்
புங்கமிலா முத்தம்மாவின் கரம்பட்டால் சிரம்
தாழ்த்தி வணங்கியவர் எத்தனை பேர்?
வைரவர் பதமடைந்த வைர ஆத்மா சாந்தியடைய
பிரார்த்தித்து துயரத்தில் பங்கு கொள்ளும்.

**பொன் தெய்வேந்திரன்**
ஓய்வு பெற்ற உதவி அதிபர்
ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை
கோப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர்கள் ஆகிவிட்ட
# அன்புத்தெய்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளுடன்............

மனித நேயம் கொண்ட எங்கள் அன்பே, நாங்கள் மண்ணில் உதித்த நாளிலிருந்து எங்களை அன்போடு அரவணைத்து சீராட்டி வளரும் பராயத்தில் நம்பிக்கையூட்டி அறிவுரைகள் தந்தீர்கள். எங்களை மற்றவர்கள் மதித்திட வளர்த்தீர்கள். நாங்கள் திருமணம் செய்த பின்பும் கூட எங்களை குழந்தை களைப் போலப் பராமரித்தீர்கள். எங்களை மட்டும் அன்றி மற்றவர்களையும் உங்கள் பிள்ளைகள் போல் அன்புடன் அறிவுரைகள் கூறி வழிகாட்டினீர்கள். உங்கள் பெருந்தன்மையை வார்த்தைகளால் கூற முடியாது. நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும் என்றும் எங்களோடு துணையாய் எங்கள் இதயத்தில் இருக்கிறீர்கள். உங்கள் ஆசீர்வாதத்தில் நீங்கள் காட்டிய வழியில் நாங்கள் நடப்போம். எனக்கூறி உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிள்ளைகள்**

எங்களை மருமக்களாகக் கருதாமல் உங்களது பிள்ளைகளைப் போல் அன்பையும் பாசத்தையும் பொழிந்தீர்களே! எங்களால் உங்களுக்கு செய்யக்கிடைக்கப் பெற்ற சிறிய சேவையை எண்ணிப் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். உங்களின் அன்பு முகமும், பாசச் சொற்களும் என்றும் எங்கள் நினைவில் நிற்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்......

**மருமக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மம்மா, அப்பம்மா என்று அன்புடன் அழைத்த வாயில் யாரை இனி அழைப்போம். எம்மழலைச்சொல் கேட்டு மகிழ்வுற்று முத்தம் தந்து எங்களை மகிழ்வித்தீர்களே! அந்த களங்கமிலா அன்பை இனி எங்கு பெறுவோம். எங்களைக் காண வருபவர்கள் எல்லோரிடமும் எங்களின் சிறிய உயர்வுகளைக் கூடச் சொல்லி மகிழ்ந்தீர்களே! கடல்கடந்து சென்றும் தொலைபேசியில் உங்கள் இனிய குரலைக் கேட்டு மகிழ்ந்தோமே! அழுது கண்ணீா வற்றியிருக்கும் எங்களுக்கு உங்கள் ஆசீர்வாதத்தை தாருங்கள் அம்மம்மா, அப்பம்மா.

**பேரப்பிள்ளைகள்.**

## பாசமழை

சிறு பிள்ளையாய் இருக்கும் போது அம்மம்மா அம்மம்மா என்று உங்களைச் சுற்றி வரும் போது மூத்தபேரன் என்று முழுப்பாசத்தையும் கொட்டி அரவணைத்து புத்திமதிகள் கூறினீர்களே! நான் கடல் கடந்து சென்றதும் பல ஆண்டுகளாகக் காணவில்லை என்று பாசத்தால் துடித்தீர்களே! தொலைபேசியில் கதைத்தும் நீங்கள் திருப்தி அடையவில்லையே! எனது திருமணத்தில் நான் யோகினியைக் கரம்பிடித்தது அறிந்து மகிழ்வுற்றீர்களே! இவ்வருடம் நாங்கள் இருவரும் மிகுந்த ஆவலுடன் உங்களைக் காண வந்த போது பூரிப்பால் கூடிக்குலாவி மகிழ்ந்தீர்களே! எங்களைப் பார்க்க வேண்டும் என்ற பலநாள் ஆசை நிறைவேறியதாகக் கூறினீர்களே! இவற்றை எப்படி அம்மம்மா நான் மறப்பேன்! நீங்கள் நீங்காத நினைவாய் என் நெஞ்சில் இடம்பிடித்து விட்டீர்களே! இறைவன் திருவடியில் உங்கள் பேரானந்த வாழ்வுக்கு பிரார்த்திக்கும்........

**ஹ.தனுஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் சிந்தனைக்கு

| | |
|---|---|
| மிக மிக நல்ல நாள் | - இன்று |
| மிகப்பெரிய வெகுமதி | - மன்னிப்பு |
| மிகவும் வேண்டாதது | - வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | - சமயோஜித புத்தி |
| மிகக் கொடிய நோய் | - பேராசை |
| மிகவும் சுலபமானது | - குற்றம் காணல் |
| கீழ்த்தரமான விஷயம் | - பொறாமை |
| நம்பக்கூடாதது | - வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | - அதிக பேச்சு |
| செய்யக்கூடாது | - உபதேசம் |
| செய்ய வேண்டியது | - உதவி |
| விலக்க வேண்டியது | - விவாதம் |
| உயர்வுக்கு வழி | - உழைப்பு |
| நழுவ விடக்கூடாதது | - வாய்ப்பு |

## ஒரு பிரார்த்தனை

- எங்கு வேதனை உண்டோ அங்கு ஆறுதல் அளிக்கவும்
- எங்கு வெறுப்புண்டோ அங்கு அன்பு காட்டவும்
- எங்கு கலக்கமுண்டோ அங்கு நம்பிக்கையூட்டவும்
- எங்கு அந்தகாரம் உண்டோ அங்கு ஒளி வீசவும்
- எங்கு துயரம் உண்டோ அங்கு மகிழ்ச்சி அளிக்கவும்
- என்னை உமது கருவியாக பயன்படுத்தும் இறைவா! மற்றவர்களால் நான் ஆறுதல் பெறாவிட்டாலும் நான் மற்றவர்களை ஆறுதல் படுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ❖ மற்றவரிடம் பெற்றுக் கொள்ளமாற் போனாலும், நான் மற்றவர்களுக்கு கொடுக்கவும்
- ❖ மற்றவர்கள் என்னில் அன்பு கூராவிட்டாலும் நான் மற்றவர்கள் மீது அன்பு காட்டவும்
- ❖ மற்றவர்கள் என்னைப் புரிந்து கொள்ளவிட்டாலும் நான் மற்றவர்களைப் புரிந்து கொள்ளவும்
- ❖ உமது வரம் தாரும் இறைவா

## தொகைகள்

**இரு குரவர்** - தாய், தந்தை
**இருவினை** - நல்வினை, தீவினை
**இரு இனம்** - ஆண், பெண்
**இரு திணை** - உயர்திணை, அஃறிணை
**இரு அறம்** - இல்லறம், துறவறம்
**இரு சுடர்** - சூரியன், சந்திரன்
**இருமை** - இம்மை, மறுமை
**இருநிதி** - சங்கநிதி, பதுமநிதி
**முப்பொறி** - மனம், வாக்கு, காயம்
**முக்காலம்** - இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்
**முத்தமிழ்** - இயல், இசை, நாடகம்
**மூவரசர்** - சேரன், சோழன், பாண்டியன்
**மும்முரசு** - வீரமுரசு, கொடைமுரசு, மங்களமுரசு
**மும்மூர்த்திகள்** - சிவன், திருமால், பிரமன்
**முத்தொழில்** - படைத்தல், காத்தல், அழித்தல்
**முக்குற்றம்** - காமம், வெகுளி, மயக்கம்
**மூவுலகு** - பூமி, அந்தரம், சுவர்க்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐம்பெரும் பூதங்கள் :** நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்

**ஐம்பெருங் காப்பியங்கள் :** சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, குண்டலகேசி, வளையாபதி

**ஐம்பெருங்குழு :** அரசர், அமைச்சர், புரோகிதர், ஒற்றர், தூதுவர்

**ஐந்திணை :** குறிஞ்சி, முல்லை, மருதம், பாலை, நெய்தல்

**ஐம்பால் :** ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால்

**ஆறுசுவை :** இனிப்பு, உறைப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு

## உலகம் உங்களை விரும்ப......

- ❖ பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் புன்னகை உதிர்க்க தவறாதீர்கள்.
- ❖ தகுதி இருந்தாலும் இல்லாவிட்டாலும் பாராட்டுதலை தவிர்க்காதீர்கள்
- ❖ உண்மையானாலும், பொய்யானாலும் முதலில் நீங்களாக எதையும் வெளியிடாதீர்கள்.
- ❖ முடிந்தாலும் முடியாவிட்டாலும் உதவமாட்டேன் என்று சொல்லாதீர்கள்
- ❖ விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் வாய் நிறைய எவரையும் வரவேற்று விடுங்கள்
- ❖ பிடித்தாலும் பிடிக்காவிட்டாலும் நன்கு உபசரியுங்கள்
- ❖ அரைகுறை நண்பரானாலும், அப்போது தான் அறிமுகமாகி இருந்தாலும் பண்பாகப் பேசிக் கொள்ளுங்கள்
- ❖ குற்றமென்றாலும் குறையென்றாலும் அதைப் பெரிது படுத்தாதீர்கள்
- ❖ ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாக இருந்தாலும் எதிர்வாதம் செய்யாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொது விடயம்

- உலகில் ஒரே ஒரு இந்து மத நாடு - நேபாளம்
- உலகில் மிகச்சிறிய நாடு - வத்திக்கான்
- இலங்கை பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்த்துறை பேராசிரியர் - சுவாமி விபுலாநந்தர்
- உலகில் மிக நீளமான மலை - அந்தீஸ் மலை
- நதிகள் ஓடாத நாடு - சவுதி அரேபியா
- துவிச்சக்கர வண்டியைக் கண்டு பிடித்தவர் -மார்க் மில்லன்
- இறக்கை இல்லாத பறவை - கிவி
- அதிக நீர் அருந்தும் பறவை - புறா
- பல்லில்லாத பிராணி - தேவாங்கு
- ஒலிம்பிக் போட்டியில் இடம்பெறாத ஓர் விளையாட்டு -கிரிக்கற்
- உடலை விட தலை பெரிதாக உள்ள உயிரினம் - எறும்பு
- அச்சிடும் இயந்திரத்தை கண்டு பிடித்தவர் - ஜோன்கார்பன்பேக்

தொகுப்பு :து.துஷாந்

து.துவாரகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி கலைச் சொற்கள்

Software – மென்பாகம் / மென்பொருள்

Central Processing unit (CPU) – மையச்செயலகம்

ROM – அழியா நினைவகம்

RAM- நிலையா நினைவகம

Monitor – காட்சித்திரை

Key Board – விசைப்பலகை

Scanner – வருடி / நகலெடுப்பான்

Mouse – சுட்டி / சொடுக்கி

User – பயனாளர்

Floppy Disk – நெகிழ்வட்டு

Compack Disk – குறுவட்டு

Disk Drive – வட்டு இயக்கி

File – கோப்பு

Directory – கோப்பகம்

Printer – அச்சுப்பொறி

Pass word – கடவுச் சொல்

Input devices – பயப்பு / உள்ளீட்டுச் சாதனங்கள்

Output devices – பெயர்ப்பு / வெளியீட்டு சாதனங்கள்

Hard ware – வன்பாகம் / வன்பொருள்

Home page – தகவல் வீடு

Internet - இணையம்

Web Page - இணையத்தளம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றியின் ரகசியம்

- அன்பு காட்டு - ஆனால் அடிமையாகி விடாதே!
- இரக்கங் காட்டு - ஆனால் ஏமாந்து விடாதே!
- பணிவாய் இரு - ஆனால் கோழையாய் இராதே!
- கண்டிப்பாய் இரு - ஆனால் கோபப்படாதே!
- சிக்கனமாய் இரு - ஆனால் கஞ்சனாய் இராதே!
- வீரனாய் இரு - ஆனால் போக்கிரியாய் இராதே!
- சுறுசுறுப்பாய் இரு- ஆனால் பதட்டப்படாதே!
- தர்மம் செய் - ஆனால் ஆண்டியாகி விடாதே!
- பொருளைத் தேடு - ஆனால் கடவுளை மறந்து விடாதே!

## சிந்தனைக்கு சில வரிகள்!!!

- வளையாத பாதையில் நடைபோடு. வெற்றி உன் பாதையில் அணிவகுக்கும்.
- வெற்றியின் சிகரத்தை அடைந்திட வேண்டுமெனில் முயற்சிகளை அத்திவாரமிட்டுக் கொள்.
- பல தீபங்கள் உன்னால் தான் ஒளிருமாகவிருந்தால் நீ தீக்குச்சியாக இருக்க அச்சம் கொள்ளாதே.
- மரணத்தை கண்டு பயப்படுவதை போல பாவங்களை கண்டும் விலகிக்கொள்.
- முயற்சி பயிற்சி இவையே உன் வாழ்க்கையின் உயர்ச்சி. அதுவே நாளைய புகழ்ச்சி.
- தப்புக் கணக்குகளை நீ அதிகம் போடாதே. ஏனெனில் உன் வாழ்வே தப்பாகி போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை ஆசிரியர் துஷ்யந்தன் அவர்களின் அன்புத்தாயாரின் மறைவு குறித்த கண்ணீர் காணிக்கை

அன்பு முகத்தவரை அரவணைக்கும் ஆர்வலரை
தங்கமனம் போன்ற தங்கமுத்தம்மா இவ்வுலகில்
நாலிரண்டு பிள்ளைகளை நாகலிங்கத்துடன் தந்தெமக்கு
நாவாரப்போற்ற தந்த எம் பொன்மணியே
தாலாட்டும் சிறுவரா தள்ளாடும் வயோதிபரா
செங்கமாரி என்றவுடன்
உன்நினைவு கொண்டோடி வந்திடுவார் உன்னருகில்
கண்டிப்பும் வாஞ்சையும் காட்டி நீ மாற்றிடவே
மாறா அன்பு உடனே நினைப்பார் உனையெல்லாம்
மண்ணில் பிறந்த பயன் மானிலம் பின் நினைப்பது
என்றும் நினைக்க வைத்து மறைந்திட்ட அம்மாவே
என்று காண்போம் என்தன் அன்புமுகம்
அன்பான அருள்வார்த்தை என்றும் எம் உள்ளத்தில்
நிலைத்து இருக்குதம்மா
உன்தன் ஆத்மா சாந்தி பெற்றிடவே என்றும் இறைஞ்சுவோமே.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

யா/ சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துர்க்காபுரம் தெல்லிப்பழை இந்து இளைஞர்

சங்கத்தினரின்

# கண்ணீர் அஞ்சலி

சீர்திரு தெல்லி யூரின்
சிறப்பினுக் குற்ற சான்றாய்
நேர்வரு செங்க மாரி
தன்னொடு மற்றும் நோய்கள்
கூர்மையாய் எம்மைத் தாக்கி
குதறிடும் போதில் எல்லாம்
தீர்த்திடத் தக்க நல்ல
தமிழர் தம் மருத்துவத்தால்
ஊர்புகழ் காண நின்ற
உத்தமி முத்தம் மாவே
சீர்பெறு திங்கள் கங்கை
சூடிய பெருமான் தேவி
துர்க்கையின் பாதம் சேர்ந்தே
பெறுகநீர்
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

துர்க்காபுரம்,
தெல்லிப்பழை

தெல்லிப்பழை
இந்து இளைஞர் சங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் தங்கமுத்தம்மா நாகலிங்கம்

அவர்களின் மறைவு குறித்து

கிறாஸ்கோப்பேர்ஸ் விளையாட்டுக் கழகத்தினரின்

# கண்ணீர் அஞ்சலி

நேற்றிருந்த வசந்தம் நிறைந்திருந்த பூபாளம்
வீற்றிருந்த பொலிவெல்லாம் – இமைவெட்டி விழிக்க முன்பே
தோற்றுவிட்டதேனோ? தொலைந்துவிட்ட மாயையேனோ?
காற்றின் திசைமாறும் கடலலையின் சுழி மாறும்
ஏற்றங்கள்கூட இமைப்பொழுதும் இறக்கமுறும் ஆனாலும்
வாழ்வின் தேற்றங்கள் மாறாது வையத்துள்
வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமென
நீங்கள் மாறிவிட்ட நிதர்சனங்கள் மாறாது.
உங்கள் ஆத்ம சாந்திக்காய் இறைவனை வேண்டுகின்றோம்!

நண்பர்கள்
கிறாஸ்கோப்பேர்ஸ்
விளையாட்டுக் கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

என்றும் எங்கள் அன்புக்கும் பாசத்திற்கும் உரியவரும் அணையா விளக்காகத் திகழ்ந்து ஒளிதந்த அன்புத் தெய்வமான அமரர் திருமதி தங்கமுத்தம்மா நாகலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளின் போது நேரில் வருகை தந்தவர்களுக்கும், உடனிருந்து உதவிகள் புரிந்தவர்களுக்கும், தபால், தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டவர்களுக்கும், இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும், தகனக் கிரியைகளிலும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் ஒத்துழைத்தவர்களுக்கும் மதிய உணவில் கலந்து சிறப்பித்தவர்களுக்கும், இன்னும் பற்பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும் இந்நினைவு மலரை சிறப்புற அச்சிட்டு உதவிய அச்சகத்தினருக்கும் எங்கள் உள் உணர்வில் உதித்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இங்ஙனம்**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்**

**"பிருந்தாவனம்"**
**தெல்லிப்பழை கிழக்கு**

**செல்லாச்சி அம்மையார் வீதி,**
**சுன்னாகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை நாகலிங்கம் தங்

# குலக்கொடியில் பு

**கைலாசபிள்ளை**
\+
**பொன்னம்மா**


சௌபாக்கியம் | திசைவீரசிங்கம் | தங்கமுத்தம்மா

- வசந்தா + ஹரிச்சந்திரா
  - தனுஷன் + யோகினி
  - உதயா
- சக்திவேல் + சரஸ்வதி
  - குமுதினி + ஜெயரூபன்
  - கோபிநாத்
  - கஜநாத்
- பிரேமா + சரவணமுத்து
- கருணைவேல் + பத்மயோகினி
  - அர்ச்சனா + இரத்தினேஸ்வரன்
  - அஞ்சலா
  - அமுதீன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ங்கம் தங்கமுத்தம்மா தம்பதியரின்

# பில் பூத்த மலர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கீதாசாரம்

- எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
- எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
- எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
- உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்?
- எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
- எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
- எதை நீ எடுத்துக் கொண்டாயோ, அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
- எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
- எது இன்று உன்னுடையதோ, அது நாளை மற்றொருவருடையதாகிறது.
- மற்றொரு நாள் அது வேறொருவருடைதாகும்.
- இந்த மாற்றம் உலக நியதியாகும்.

SIVARANJANAM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்.எஸ் பிரின்டேர்ஸ், [illegible] தொ.பே 021-2225413